[1972 மார்ச் 27

திரு. எம். தேவராசன் : இந்த விருது பெற்றவர்கள் இறந்த பிறகு போஸ்துமஸ் அவார்டு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலேயே சொன்னேன். போலீசுக்கு வழங்கப்பட்ட விருதுகள் பற்றிச் சொல்லும்போதே சொன்னேன். இறந்துவிட்டால் மனைவியிடத்தில் அந்தப் பதக்கம், விருதுகள் வழங்கப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்ட பரிசுகள் தண்ணீரில் மூழ்க இருந்தவர்களைக் காப்பாற்றினார்கள் என்பதற்காக வழங்கப் பட்டதாகச் சொன்னார்கள். சென்னை நகரில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் உள்ளே தீரத்துடன் நுழைந்து குழந்தைகளை எல்லாம் வெளியே கொண்டுவந்து காப்பாற்றுகிறார்கள். வீடு எரிவது தெரியாமல் தூங்கிக் கொண்டிருக் கின்றவர்களையும் இப்படி உள்ளே நுழைந்து காப்பாற்றுகின்ற தீரர் களுக்கு இப்படிப்பட்ட பரிசு வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுடைய பெயர்கள் அறிவிக்கப்பட்டு நிரூபிக்கப்படுமானால் அவர்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வைகை ஆற்றில் வெள்ளம் வந்த போது 26 வயது வாலிபர் காத்தான் என்பவர் பல உயிர்களைக் காப்பாற்றியதற்காக இதுவரை இந்த மாதிரியான பதக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. நடப்பு ஆண்டிலாவது கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரியாருடைய மிகச்சிறந்த தொண்டன் என்று சொல்லப்படுகின்ற அந்தக் காத்தானுக்கு வருகிற ஆண்டு அப்படிப்பட்ட பதக்கம் வழங்கப்பட வேண்டுமென்று அரசு சிபாரிசு செய்யும்.

தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களின் பங்கு.

* 720 வினா: திரு. சு. துரைசாமி
திரு. ஏ. சுவாமிதாஸ்
திரு. தோப்பூர் திருவேங்கடம் : } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகள் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு தரும் திட்டம் தமிழ்நாட்டில் எந்த அளவு நடை முறைக்கு வந்துள்ளது?

1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தமிழ்நாட்டில் தனியார் துறையில் 16 தொழில் நிறுவனங்களில் கூட்டு நிர்வாகக் குழுக்கள் செயல்படுகின்றன. 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் 5 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் கூட்டு ஆலோசனைக் குழுக்கள் செயல்படு கின்றன.

முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின்போது உறுதியளித்ததற்கு இணங்க கூட்டுறவுத் துறை, அரசுத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு மூலதனத்தில் இடம் அளிக்கும் கொள்கை பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்பட இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஏற்கனவே நமது நிதியமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது முக்கியமான தொழில் நிறுவனங்களில் எல்லாம் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் எவ்வளவு காலத்திற்குள்ளாக, எந்தெந்தத் தொழிற்சாலைகளில் இது அமல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்த குழு அமைந்த பிறகு அந்த விவரங்கள் அறிவிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உடனடியாக சர்க்கார் நடத்தக் கூடிய தொழில் நிறுவனங்களில், குறிப்பாக சர்க்கார் டிரான்ஸ் போர்ட், மின்சார போர்டு போன்ற இடங்களிலாவது அதற்கான ஏற்பாட்டைச் செய்வதில் குழுவின் பரிந்துரை வரும் வரை காத்தி ராமல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: குழுவினுடைய அறிக்கையை எந்த அளவுக்கு விரைவில் தரவேண்டுமோ அந்த அளவுக்கு விரைவில் ஆவன செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் கூறிய அந்தக் குழு எப்போது நியமிக்கப்படும் என்பதைக் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தேதியிட்டுக் கூறிட முடியாது. விரைவில் அமைக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: குழு ஒன்று நியமிக்கப் போவதாகச் சொன்னார்கள். யார் யாரை உறுப்பினர்களாகப் போடுவதாக இருக்கிறார்கள்? சட்ட மன்ற உறுப்பினர்களில் அந்தத் துறையில் விவரம் தெரிந்தவர்களை அந்தக் குழுவிலே உறுப்பினர்களாகப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் யோசனை நினைவில் கொள்ளப்பட்டு உரிய நேரத்தில் ஆவன செய்யப் படும்.

திரு. கு. காமாட்சி : தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர் களுக்குப் பங்கு தரப்பட வேண்டுமென்பது நியாயம். அதே போல் தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களே தலைவர்களாக இருக்க வேண்டுமென்ற நிலை பற்றி அரசிடம் பரிசீலனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே இந்தக் கருத்தை முதல்வர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஒரு சில தொழிற் சாலைகளில் அப்படி தொழிலாளர்களே தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்து நடத்தி வருகிறார்கள்.

Mechanical driers in Thanjavur District.

* 721 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Food Corporation of India proposes to dismantle the driers in Thanjavur district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மேலும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதற்காக, உலர்த்தி இயந்திரங்கள் Mechanical driers ஏழினை வேறிடங்களுக்கு மாற்ற இந்திய உணவுக் கழகம் கருதியுள்ளது. இவற்றில் 3 மாடர்ன் ரைஸ் மில்ஸ் உள்ள சிதம்பரம், தஞ்சாவூர், செம்பனார்கோவில் ஆகியவிடங்களிலும் காரைக்காலி லுள்ள சியாத்தமங்கையில் ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றன. பிற 3 இயந்திரங்கள் அமைக்கப்படுவதற்கான இடங்கள் பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

(இ) இருக்கின்ற இயந்திரங்களை இயன்றவரை சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதற்காக இந்திய உணவுக் கழகம் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாலும், ஆலையின் திறனை மேம்படுத்து வதற்காக இப்பிரிவுகளில் சில, மாநிலத்திற்குள்ளேயே அமைக்கப்பட விருப்பதாலும் அரசின் நடவடிக்கைகளுக்கான அவசியமில்லை.